(3) உடுக்குறியிட்ட வினாக்களுக்கு உடுக்குறியிடப்படாத வினாக்களாக விடைகள்.

MR. CHAIRMAN : I have also announce to the House that twenty-one answers to starred questions, which have been received from the Government, are laid on the Table of the House to-day as Unstarred Question Nos. 30 to 50.

5. கவன ஈர்ப்பு.

மதுரை, திருநெல்வேலி, சென்னை ஆகிய இடங்களில் கல்லூரிகள் காலவரையறையின்றி மூடிக்கிடப்பது குறித்து.

திரு. எஸ். வெள்ளைப்பாண்டியன் : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயம் பற்றி, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். மதுரை. திருநெல்வேலி, சென்னை ஆகிய இடங்களில் கல்லூரிகள் காலவரையறையின்றி மூடிக் கிடக்கின்றன. மேலும் மாணவர்களுடைய கிளர்ச்சி தொடர்ந்து இருந்து வருகிறது. இதுபற்றி அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 1972-73 கல்வி ஆண்டின் துவக்கத்தில் சென்னை, மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள கீழ்க்கண்ட கல்லூரிகளிலிருந்து மாணவர் கிளர்ச்சிகள் பற்றிய தகவல்கள் வந்தன. இவற்றால் கல்வி போதனையில் தற்காலிக தடங்கல் ஏற்பட்டதுடன், சில இடங்களில் கல்லூரியை மூடி வைக்கவும் நேர்ந்தது.

1. சென்னை நகரம் :—

சட்டக் கல்லூரி, சென்னை 2—8—1972 அன்று மாணவர்களில் 75 சதவிதம் பேர் உதவித் தொகை அளித்தல், மின் விசிறி பொருத்துதல் போன்ற கோரிக்கைகளுக்காக அடையாள படிப்பு நிறுத்தம் செய்தனர். இக்கோரிக்கைகள் ஏற்கெனவே பரிசீலனையில் உள்ளன.

2. திருநெல்வேலி மாவட்டம் :—

(1) மார்கரேசியஸ் கல்லூரி, நாசரத் :—

22—7—1972 அன்று கல்லூரி மன்றம் அமைக்கவேண்டுமென்று கோரி மாணவர்கள் வகுப்புகளுக்குச் செல்லவில்லை. முதல்வர் இதனை ஒப்புக்கொண்டதால் மாணவர்கள் 24—7—1972 விருந்து மீண்டும் வகுப்புக்குச் சென்றனர்.